**ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி, சென்னை – 600 006**

**மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 2223/A11/பமேகு/ஒபக/2022 நாள்: 17.03.2023**

**பொருள்:** ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி – அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்கள் - வழிகாட்டுதல்கள் – சார்பு

**பார்வை:** பள்ளிக்கல்வி ஆணையர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க. எண்.2223/ C7/பமேகு/ஒபக/2022 நாள்: 21.07.2022

**********

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம், மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை முன்பு கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெற்று வருகிறது. இக்கல்வியாண்டில் பொதுத்தேர்வு சார்ந்து 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களில் தேர்வுக்கு வாராதவர்கள் எவரென கண்டறிவதற்கும் இத்தேர்வின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்களின் எதிர்காலம் குறித்து ஆலோசனைகள் வழங்குவதற்கும் அனைத்து தேர்வர்களும் தேர்வினை எதிர்கொள்வதற்கும், துணைத் தேர்வு சிறப்பு பயிற்சி மையம் ஏற்பாடு செய்வதற்கும் கண்காணிக்கவும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் 24.03.2023 (வெள்ளிக்கிழமை), 10.04.2023 (திங்கட்கிழமை) மற்றும் 24.04.2023 (திங்கட்கிழமை) ஆகிய நாட்களில் பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணி வரை அவசியம் நடத்த அறிவுறுத்தப்படுகிறது.**

**பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் வருகைப்பதிவு**

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் வருகைப்பதிவினை தலைவர் மட்டுமே பெற்றோர் செயலியில் (TNSED Parent App) கூட்டம் நடைபெறும்போது பதிவு செய்தல் வேண்டும். தலைவரது கைபேசி அல்லது பிற உறுப்பினர்களின் கைபேசி மூலமாக வருகைப்பதிவினை பதிவு செய்வதை தலைமையாசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

பள்ளி மேம்பாட்டுத் திட்டம்

பள்ளி மேம்பாட்டு திட்டம் தயாரிக்கவும் அதை முழுமையாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவரவும் இதற்கெனப் பள்ளி மேலாண்மைக் குழு தொகுதியைப் (SMC Module) பெற்றோர் செயலியில் (TNSED Parent App) ஒரு பகுதியாகப் பள்ளிக் கல்வித் துறை பயிற்சியின் வாயிலாக அறிமுகப்படுத்தியுள்ளது.

தலைமையாசிரியர்களுக்கான வழிகாட்டுதல்கள் :

- பொதுத்தேர்வு நடைபெறும் நாட்களில், தேர்வு நேரம் முடிந்தவுடன் தேர்வுக்கு வாராத மாணவர்களின் விவரங்கள் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களால் அன்று பிற்பகலிலேயே சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல் வேண்டும். இத்தகவல்களை தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களுக்கு பகிர்தல் வேண்டும்.
- பொதுத்தேர்விற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களில் (Nominal Roll) நீண்ட நாட்களாக விடுப்பில் இருப்பின் அவர்கள் சார்ந்த விவரங்களை உரிய பள்ளி தலைமையாசிரியர்கள் சிறப்பு பள்ளி மேலாண்மைக்குழு கூட்டத்திற் முன்னரே தயார்செய்து வைத்திருக்க வேண்டும்.

சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழு கூட்டப் பொருட்கள்:

I. <u>சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும் நாள் 24.03.2023 (வெள்ளிக்கிழமை).</u>

<u>10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை பதிவுசெய்த அனைத்து மாணவர்களும் தேர்வு எழுதுவதற்கான வழிகொட்டுதல்கள்-</u>

1. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்விற்கு பதிவு செய்த மாணவர் பெயர் பட்டியலை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் பகிர்தல் வேண்டும். அனைத்து மாணவர்களும் தேர்வு எழுதுவதை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உறுதி செய்யவேண்டும்.

2. நீண்ட நாட்களாக பள்ளிக்கு வராத மாணவர்களின் பெயர்ப் பட்டியலை சேகரித்து அம்மாணவர்களை பள்ளியில் நடைபெறும் சிறப்புப் பயிற்சி மையங்களுக்கு

வரவழைத்து பயிற்சியில் பங்கேற்பதை பள்ளி மேலாண்மைக்குழு உறுதி செய்தல் வேண்டும்.

3. பொதுத்தேர்வு நடைபெறும் நாட்களில், தேர்வு நேரம் முடிந்தவுடன் அன்று பிற்பகலிலேயே தேர்விற்கு வராத மாணவர்களின் விவரங்கள் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரால் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்த மாணவர்கள் சார்ந்த விவரங்களை அறிந்துகொண்டு உடனே அடுத்து வரும் தேர்விற்கு மாணவர்கள் தவறாது வருகைப் புரிவதை தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு பள்ளியிலும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் வாயிலாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பொதுத் தேர்வு முக்கியத்துவம் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும்.

5. மாணவர்களின் குடியிருப்பு பகுதிகளில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களை 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்விற்கு பதிவு செய்த அனைத்து மாணவர்களும் தேர்வு எழுதுவதை உறுதிசெய்யும் செயல்பாடுகளில் பள்ளி மேலாண்மைக் குழு உறுதுணையாக இருக்க வேண்டும் .

6. மாணவர்கள் அனைத்து பாடத் தேர்வுகளையும் எழுதுவதற்கான ஆலோசனைகளை தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் பெற்றோர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

II. <u>சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெறும் நாள் 10.04.2023 (திங்கட்கிழமை) 11-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்விற்கு வருகைப் புரியாத மாணவர்கள் சார்ந்த வழிகாட்டுதல்கள்-</u>

1. பொதுத்தேர்வு எழுதாத மாணவர்களின் பட்டியலை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் பகிர்தல் வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பட்டியலில் உள்ள மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கும் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கும் துணைத் தேர்விற்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

2. ஒவ்வொரு பள்ளியிலும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் அடங்கிய குழுவினை அமைத்து பொதுத்தேர்வு எழுதாத மாணவர்களை கண்டறிவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. பொதுத்தேர்வு எழுதாத மாணவர்களை கண்டறிந்து தேர்வு எழுதவைக்கும் செயல்பாட்டில் கூடுதல் உதவிகள் தேவைப்படின் சார்ந்த மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்போடு பிற துறைகளின் பங்களிப்பை பெறுதல் வேண்டும்.

4. துணைத் தேர்வு குறித்த மாணவர்களின்/பெற்றோர்களின் சந்தேகங்களை மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள 14417-இலவச உதவி மைய எண்-ஐ பயன்படுத்தலாம், இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

5. ஒவ்வொரு பள்ளியிலும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் வாயிலாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு துணைத் தேர்வு முக்கியதுவம் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும்.

6. துணைத்தேர்வு எழுதுவதற்கான முன்தயாரிப்பிற்கும், உயர்கல்வி பயில்வதற்கான ஆலோசனைகள் வழங்குவதற்கும் பள்ளியளவில் சிறப்பு பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டு பாட ஆசிரியர்கள் மூலம் பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுவதில் பள்ளி மேலாண்மைக் குழு முழு ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.

III. <u>சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெறும் நாள் 24.04.2023 (திங்கட்கிழமை)</u>

<u>10-ஆம் வகுப்பு பொதுத்தேர்விற்கு வருகைப்புரியாத மாணவர்கள் சார்ந்த வழிகாட்டுதல்கள்-</u>

1. 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதாத மாணவர்களின் பட்டியலை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் பகிர்தல் வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பட்டியலில் உள்ள மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கும்

மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கும் துணைத் தேர்விற்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

2. ஒவ்வொரு பள்ளியிலும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் அடங்கிய குழுவினை அமைத்து பொதுத்தேர்வு எழுதாத மாணவர்களை கண்டறிவதற்க்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதாத மாணவர்களை கண்டறிந்து தேர்வு எழுதவைக்கும் செயல்பாட்டில் கூடுதல் உதவிகள் தேவைப்படின் சார்ந்த மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்போடு பிற துறைகளின் பங்களிப்பை பெறுதல் வேண்டும்.

4. 10-ஆம் வகுப்பு துணைத் தேர்வு குறித்த மாணவர்களின்/பெற்றோர்களின் சந்தேகங்களை மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள 14417-இலவச உதவி மைய எண் பயன்படுத்தலாம், இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

5. ஒவ்வொரு பள்ளியிலும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் வாயிலாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு துணைத் தேர்வு முக்கியதுவம் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும்.

6. 10-ஆம் வகுப்பு துணைத்தேர்வு எழுதுவதற்கான முன்தயாரிப்பிற்கும், உயர்கல்வி பயில்வதற்கான ஆலோசனைகள் வழங்குவதற்கும் பள்ளியளவில் சிறப்பு பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டு பாட ஆசிரியர்கள் மூலம் பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுவதில் பள்ளி மேலாண்மைக் குழு முழு ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.

**பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் - பார்வையாளர்கள்**

மாவட்ட கள அலுவலர்கள் (APO, APO (Ele.), DEO, BEO, DC, DIET faculty) பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் கருத்தாளர்கள் - பார்வையாளர்களாக சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் அவசியம் கலந்து

கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். பார்வையாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனத் அறிவுறுத்தப்படுகிறது.

- பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நாளன்று பிற்பகல் 2.00 மணியளவில் பார்வையாளர்கள் பள்ளிக்குச் செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள். பின்பற்ற வேண்டிய அனைத்து வழிமுறைகளையும், கூட்ட நிகழ்வையும் பார்வையாளர்கள் முன்கூட்டியே அறிந்து வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்
- பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெற்று முடியும் வரை பார்வையாளர்கள் பள்ளியில் இருக்க வேண்டும்.
- தேவைப்படும் பட்சத்தில் கூட்டம் சார்ந்த நிகழ்வில் பார்வையாளர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். (வருகைப் பதிவு, திட்டமிடல் செயலி சார்ந்த செயல்பாடுகளில்)
- பார்வையாளர்களுக்கென தரப்பட்டுள்ள படிவத்தை (Google Form) பூர்த்தி செய்து, கூட்ட நாளன்றே இரவு 8.00 மணிக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிறப்பான முறையில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் சிறப்புடன் நடத்திடவும், வரும் கல்வியாண்டுகளில் பொதுத் தேர்வினை சந்திக்கும் மாணவர்களுக்கும் தேர்வுகளை எழுதுவதற்குண்டானஅனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைந்து செய்ய வேண்டுமென அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/ மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மாநில திட்ட இயக்குநர்